பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

15 06 2024 **SATURDAY**7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளரும் நாடுகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஜி-ஏழு நாடுகளின் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் திரு.நரேந்திர மோடி, இத்தாலி பிரதமர் திருமதி. **Giorgia Meloni**–யை நேற்று சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

3. மக்கள் அனைவருக்கும் தரமான சுகாதார சேவைகளை வழங்குவதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

4. தென்னாப்பிரிக்க அதிபராக சிறில் ராமபோஸா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்..

5. **Perugia** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று ஸ்பெயினின் **Bernabe Zapata-**வை எதிர்கொள்கிறார்.

**>>>><<<<**

வளரும் நாடுகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இத்தாலியில் நடைபெற்று வரும் ஜி-ஏழு நாடுகளின் உச்சிமாநாட்டில் நேற்று பேசிய அவர், குறிப்பாக, ஆப்பிரிக்க போன்ற நாடுகளின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கூறினார்.

ஜி-20 அமைப்பில் இந்தியாவும், ஆப்பிரிக்க யூனியனும் நிரந்தர உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது கவுரவம் அளிக்கக்கூடியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எரிசக்தி துறையில் மாற்று வழிகளை கண்டறிந்து, சுற்றுச்சூழலுக்கு மாசு அல்லாத வகையில் அவற்றை இந்தியா பயன்படுத்த முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எரிசக்தியை பொறுத்தவரை கிடைக்கும் வளங்களை பயன்படுத்தி, அனைவருக்கும் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் இந்தியா இறங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

2070ஆம் ஆண்டுக்குள் கார்பன் உமிழ்வை முற்றிலுமாக கட்டுப்படுத்த இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தன்று, மரக்கன்றுகள் நடும் இயக்கத்தை மிகப் பெரிய அளவில் தாம் துவக்கியதாகவும், இதனை உலக நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை குறிப்பிட்ட பிரதமர், பொதுவாக தொழில்நுட்பத்தின் பயன்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும், அனைவரின் முன்னேற்றத்திற்காக இதனை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மனிதநேயத்துடன் கூடிய அணுகுமுறைகளை குறைத்து மதிப்பிடக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பொதுமக்களின் பல்வேறு தேவைகளுக்காக வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டு வருவதையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார்.

**>>>><<<<**

இத்தாலியில் ஜி-ஏழு உச்சிமாநாட்டில் பங்கேற்ற பிரதமர் திரு. நரேந்திரமோடி தனது பயணத்தை நேற்று நிறைவு செய்து, தாயகம் புறப்பட்டார்.

நேற்று, இத்தாலியின் **Bari** நகரில் பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரோன், கத்தோலிக்க மத தலைவர் போப் பிரான்சிஸ் உள்ளிட்ட தலைவர்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து பேசினார்.

**>>>><<<<**

ஜி-ஏழு நாடுகளின் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் திரு.நரேந்திர மோடி, இத்தாலி பிரதமர் திருமதி. **Giorgia Meloni**–யை நேற்று சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினார்.

பாதுகாப்பு துறையில் இரு நாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைத்து செயல்படுவது குறித்தும், இந்தியா - இத்தாலி உத்திசார் ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாகவும் இருவரும் விவாதித்தனர்.

பசுமை எரிசக்தி, உற்பத்தி துறை, விண்வெளி, அறிவியல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் வர்த்தக ரீதியிலான உறவுகளை விரிவுபடுத்துவது குறித்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இத்தாலிய பிரதமருடன் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

சர்வதேச மற்றும் மண்டல அளவிலான முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும், இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இந்தியா – மத்தியக்கிழக்கு – ஐரோப்பிய பொருளாதார வழித்தடம் குறித்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, திருமதி. **Giorgia Meloni**–யுடன் ஆலோசனை நடத்தினார்.

**>>>><<<<**

மக்கள் அனைவருக்கும் தரமான சுகாதார சேவைகளை வழங்குவதற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் முதல் 100 நாள் இலக்குகளை நிறைவேற்றும் வகையில் சுகாதாரத்துறையின் உயரதிகாரிகளுடன் நேற்று புதுதில்லியில் ஆலோசனை நடத்திய போது இதனை அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் தற்போதுள்ள சுகாதார கட்டமைப்புகளையும், அவற்றை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகளின் கருத்துக்களை அவர் கேட்டறிந்தார்.

பிரதமரின் மருத்துவ காப்பீட்டு திட்டம், தடுப்பு மருந்து திட்டம், விபத்து கால அவசர சிகிச்சை திட்டம் ஆகியவற்றை விரிவுபடுத்துவது குறித்தும் அதிகாரிகளுடன் அமைச்சர் திரு. நட்டா ஆலோசனை நடத்தினார்.

**>>>><<<<**

குவைத் தீ விபத்தில் படுகாயமடைந்த மேலும் ஒரு இந்தியர் உயிரிழந்ததை அடுத்து இந்த விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 50ஆக அதிகரித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்த தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகேயுள்ள வானரமுட்டி கிராமத்தைச் சேர்ந்த மாரியப்பனின் உடல் நேற்று, கொச்சியிலிருந்து தூத்துக்குடி கொண்டுவரப்பட்டது.

அவரது உடலுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அஜய் சீனிவாசன், கோட்டாட்சியர் ஜோன் கிறிஸ்டிபாய், நகராட்சித் தலைவர் திரு. கருணாநிதி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் மாரியப்பன் உடல் தகனம் செய்யப்பட்டது.

இதேபோல், தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி அருகேயுள்ள ஆதனூர் கிராமத்தைச் சேர்ந்த பொறியாளர் புனாப் ரிச்சர்டு ராயின் உடல் நேற்றிரவு சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் திரு. தீபக் ஜேக்கப் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி பெற்றோர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை குடும்பத்தினரிடம் ஆட்சியர் வழங்கினார்.

>>>><<<<

பெண் குழந்தைகள் கல்வி கற்க வேண்டியதன் அவசியம் குறித்து ஆசிரியர்கள், அவர்களின் பெற்றோர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று மாநில மகளிர் ஆணையத் தலைவர் திரு. குமாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படும் ஒருங்கிணைந்த சேவை மையம், முதியோர் இல்லம் மற்றும் அரசு பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளில் நேற்று ஆய்வு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இம்மாவட்டத்தில் மலைவாழ் பழங்குடியின மாணவிகள் கல்வி கற்பதற்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்று அவர் கூறினார்.

இளம் வயது திருமணத்தால், பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவியரிடம் மாவட்ட நிர்வாகம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் திருமதி. குமாரி கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

தென்னாப்பிரிக்க அதிபராக சிறில் ராமபோஸா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளும் தேசிய காங்கிரஸ், அதிக இடங்களில் வெற்றிபெற்ற போதிலும் அறுதி பெரும்பான்மை பெறவில்லை.

இதையடுத்து, பிற கட்சிகளுடன் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் பேச்சு நடத்தியது.

அக்கட்சிகள் ஆதரவு அளிக்க முன்வந்ததை அடுத்து சிறில் ராமபோஸாவை மேலும் ஐந்தாண்டு காலத்திற்கு பிரதமராக தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, நேற்று தென்னாப்பிரிக்க நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ராமபோஸாவுக்கு ஆதரவாக 283 வாக்குகளும், அவரை எதிர்த்து போட்டியிட்ட பொருளாதார சுதந்திரத்திற்கான போராட்டத் தலைவர் ஜூலியஸ் மலேமா-வுக்கு 44 வாக்குகளும் கிடைத்தன.

>>>><<<<

மும்பை சர்வதேச திரைப்பட விழா இன்று தொடங்குகிறது.

முதல்முறையாக இந்த ஆண்டு, மும்பை மட்டுமின்றி பிற நகரங்களிலும் திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளது.

சென்னையில் இசைக்கல்லூரி வளாகத்தில் உள்ள தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தின் திரையரங்கில் தேசிய மற்றும் சர்வதேச திரைப்படங்கள் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மும்பை திரைப்பட விழா வரும் 21ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>><<<<

தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் ஜாமின் மனுமீதான விசாரணை, இம்மாதம் 19ஆம் தேதி நடைபெறும் என்று சிறப்பு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டு, சிறையில் உள்ள திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்த ஜாமின் மனு, கூடுதல் செசன்ஸ் நீதிமன்ற நீதிபதி திரு. முகேஷ் குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கில் பதிலளிக்க அமலாக்கத்துறை அவகாசம் கோரியதை தொடர்ந்து, விசாரணையை வரும் 19ஆம் தேதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

>>>><<<<

உத்தரபிரதேசம், பீகார் மேற்கு வங்கம், ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களில் இன்றும் வெப்பம் அதிகரித்து காணப்படும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஜார்க்கண்ட், ஹிமாச்சலப்பிரதேசம், ஹரியானா, சண்டிகர், தில்லி, மத்தியப்பிரதேசத்தின் வடகிழக்குப் பகுதி உள்ளிட்டவற்றிலும் கடந்த சிலநாட்களாக வெப்பம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இமயமலையை ஒட்டியுள்ள சிக்கிம் மற்றும் வடகிழக்கு பகுதியில் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடகிழக்கு பகுதியில், அடுத்த 3 முதல் நான்கு நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் அறிவித்துள்ளது.

**>>>><<<<**

மகாராஷ்ட்டிர மாநிலம், நாசிக்கின் பல்வேறு இடங்களிலும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் நடத்திய சோதனையை தொடர்ந்து, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனித கடத்தல் மற்றும் இணையதள குற்றங்கள் தொடர்பாக இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும், கடந்த மூன்று வாரங்களில் ஏற்கனவே ஐந்து பேர் கைது செய்யப்பட்ட நிலையில், தற்போது சுதர்சன் என்ற நபர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் என்ஐஏ அதிகாரிகள் தெரிவித்தனர்.

**>>>><<<<**

இத்தாலியில் நடைபெறும் **Perugia** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் இன்று ஸ்பெயினின் **Bernabe Zapata-**வை எதிர்கொள்கிறார்.

**>>>><<<<**

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது கடைசி லீக் ஆட்டத்தில் கனடா அணியை எதிர்கொள்கிறது.

ஃப்ளோரிடாவில் உள்ள **Lauderhill-**நகரில் இப்போட்டி இன்றிரவு எட்டு மணிக்கு தொடங்கவுள்ளது.

ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி ஏற்கனவே 3 லீக் ஆட்டங்களில் அயர்லாந்து, பாகிஸ்தான், அமெரிக்கா என மூன்று அணிகளை தோற்கடித்து ஆறு புள்ளிகளுடன் சூப்பர்-8 சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

எனவே, கனடாவுடனான இன்றைய ஆட்டத்தின் முடிவு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

**Kingstown-**ல் தற்போது நடைபெற்று வரும் போட்டியில், நேபாள அணி வெற்றி பெற 116 ரன் என்ற இலக்கை தென்னாப்பிரிக்கா நிர்ணயித்துள்ளது.

முன்னதாக நேற்று அயர்லாந்து, அமெரிக்கா அணிகளுக்கு இடையேயான போட்டி மழை காரணமாக ரத்து செய்யப்பட்டதால், புள்ளிகள் அடிப்படையில் சூப்பர்-8 சுற்றுக்கு அமெரிக்கா தகுதி பெற்றதை அடுத்து, பாகிஸ்தான் அணி அந்த வாய்ப்பை இழந்தது.

**>>>>END<<<<**